திரு. பீ. கலியாணசுந்தரம்: கேள்வியிலிருந்து அப்படித்தான் தெரிகிறது. ஆனால் அந்தக் கோரிக்கை யாரிடமிருந்து வந்திருக்கிறது என்று ஃபைலைப் பார்த்துப் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: கொஞ்சம் நேரமானாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும். இதிலே வந்திருக்கக் கூடியதையெல்லாம் பார்க்கின்றபொழுது, ஏதோ ஒரு கிராமத்திலிருந்து வந்திருக்கிறது, தனிப்பட்டவர்கள்தான் நிறையக் கையெழுத்துப் போட்டிருக்கிறார்களா என்ன என்பது எனக்குத் தெரியவில்லை.

பர்மா அகதிகள்

* 413 கேள்வி.—திரு. தா. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மாத்தூரில் பர்மா அகதிகளுக்காகக் காலனி கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதற்கான செலவு எவ்வளவு ?

(உ) அந்தக் காலனிக்கு என்ன பெயர் வைக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (c) It was originally proposed to establish a township for Burma repatriates in Mathur area in Tiruchirappalli district with pucca buildings. This proposal was subsequently modified in the wake of the emergency and it was proposed to establish a colony in the area on a smaller scale with 750 families engaged on vegetable gardening and 100 families on dairy farming to begin with. The draft scheme in this regard worked out by the Collector of Tiruchirappalli has been forwarded to the Government of India for their approval. Their final reply is awaited. A proposal is also under consideration for allotment of housing plots to about 500 non-agriculturist families to be settled by securing employment in the various industries in this area.

In Mathur village, a scheme for settling 20 repatriate families on agriculture by allotting them 50 acres has already been implemented. The colonists have built houses themselves in the Government land.

A special Home for unattached women and a special residential school for school-going children of repatriates have also been established in Mathur.

7th November 1966]

It is reported that the colonists who were settled in the agricultural lands refer to their colony as "CHOCKALINGAPURAM".

(b) The estimated cost of these schemes is as follows :—

(1) Settling 20 families at Mathur on Agriculture, Rs. 1,00,000.

(2) Residential school for children of Burma repatriates Rs. 3,24,000 (recurring) and Rs. 2,25,000 (non-recurring).

(3) Home for unattached women, Rs. 1,87,000 (recurring) and Rs. 64,000 (non-recurring).

திரு. ஆ. ப. அழகமுத்து : பர்மெனென்ட் வீடுகள் கட்ட திட்டம் வகுக்கப்பட்டு மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அதற்கு 'எஸ்டிமேட்' தொகை எவ்வளவு ஆகிறது என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த விவரம் என்னிடம் இல்லை. ஆனால், பக்கா வீடுகளைக் கொண்ட பர்மெனென்ட் காலனி கட்டி, அதற்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் முன்பு யூனியன் அமைச்சராக இருந்த திரு. மகாவீர் 9-00 a.m.
தியாகி அவர்கள் அங்கு நேரில் வந்திருந்து, அப்படிப்பட்ட ஆலோசனை சொன்னார்கள். அதற்குச் செலவு சில கோடி ரூபாய் ஆகும் என்று எஸ்டிமேட் போடப்பட்டது. அதைத் தொடர்ந்து 'எமர்ஜென்சி' ஏற்பட்ட காரணத்தால், அவ்வளவு பெரிய திட்டத்தை உடனே எடுத்துக்கொள்ள முடியாமல், அங்கிருக்கும் நிலத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்வது, பால் பண்ணை வைப்பது, கோழிப் பண்ணை ஆரம்பிப்பது என்ற வகையில் இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. மு. கருணாநிதி : 'சொக்கலிங்கபுரம்' என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அது யாருடைய பெயர் என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அது அந்த ஜில்லாக் கலெக்டராக இருந்தவருடைய பெயர்.

திரு. ம. கலியாணசுந்தரம் : இந்த விரிவான திட்டத்திற்கு அதிகம் செலவாகும் என்றாலும், திட்டத்தை நடத்தினால் தான் ஏதாவது நன்மை ஏற்படும். பாதிக் கிணறு தாண்டுகிற கதையாக ஒருசில குடும்பங்கள்தான் அங்கே குடியேற வசதி இருக்கிறதே தவிர, பெருவாரியானவர்கள் குடியேறுவதற்கு வசதி இல்லாமல் இருப்பதால், விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பெரிய திட்டத்தையும் நாம் கைவிட்டுவிடவில்லை. இப்பொழுது இருக்கும் நிதி வசதிக்கேற்ற முறையில், 'ஃபேஸ்டு ப்ரோக்ராம்' ஆகச் செய்துகொண்டிருக்கிறோம். இப்பொழுது செய்வதும் அந்தப் பெரிய திட்டத்திற்கு உட்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : பர்மா அகதிகள் மாத்தூர் மாத்திரம் அல்லாமல், திருச்சி மாவட்டத்தில் இன்னும் பல பகுதிகளில் குடியேறியிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளிலும் பர்மெனென்ட் கட்டடம் கட்டிக்கொடுக்கத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : திருச்சி மாவட்டத்தில் மட்டுமல்லாமல், தமிழ்நாடு பூராவிலும் பல பகுதிகளில் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால், ஒரு கேந்திரமான இடத்தைத் தேர்ந்தெடுத்து, ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தை ஒதுக்கி, அங்கே தொழிற்சாலை, மற்றவை எல்லாம் வைக்கவேண்டும் என்பதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம். மற்ற பகுதிகளிலும் விவசாயம் செய்ய நிலம் கொடுக்கிறார்கள் ; அதற்கு வேண்டிய கடனுதவி கொடுக்கிறார்கள். இன்னும் மற்ற வசதிகளும் செய்கிறார்கள். ஆனால், இது ஒரு முக்கிய கேந்திரமான காலனி அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையாகும்.

திரு. இராம. அரங்கண்ணல் : பொது மக்களுடைய ஊழியர் என்று கருதப்படுகிற சர்க்கார் அதிகாரிகள், அவர்களுடைய பெயரால் சில இடங்கள் அமைக்கப்படுகிற நேரத்தில், சர்க்காரினுடைய முன் அனுமதி பெறவேண்டும் என்ற விதி இருக்கிறதா ? அந்த வகையில் இந்தக் கலெக்டரும் சர்க்காரினுடைய முன் அனுமதி பெற்றாரா ? அல்லது முன் அனுமதி பெறாமலேயே அந்தந்த அதிகாரிகள் தங்கள் தங்களுடைய பெயர்களை இப்படிப் பட்டவைகளுக்கு வைத்துக்கொள்ளலாம் என்று சர்க்கார் ஏதாவது உத்திரவிட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : இது கலெக்டர் தலையிட்டுச் செய்த காரியம் அல்ல. இந்தக் காலனிக்குப் பெயர் மாத்தூர் காலனிதான் : சொக்கலிங்கபுரம் காலனி அல்ல. ஒரு பகுதியில் 50 ஏக்கர் நிலம் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தில் 'சொக்கலிங்கபுரம்' என்று போர்டு போட்டிருக்கிறார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : திருச்சி ஜில்லாவில் பர்மா அகதிகளுக்குக் காலனி கட்டியிருப்பதைப் போல, இராமநாதபுரம் ஜில்லாவிலும் காலனி கட்ட ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ? இல்லையென்றால், அந்தப் பகுதி மக்கள் தான் பெருவாரியாக வெளி நாடுகளிலிருந்து வருகிறார்கள் என்ற காரணத்தைக் கருதியாவது, அத்தகைய திட்டம் அங்கே மேற்கொள்ளப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : பெரிய அளவில் ஒரு காலனியை வைத்து நடத்துவதற்கே இவ்வளவு சங்கடம் இருக்கிறது. ஆகவே நிதி வசதிக்குத் தகுந்த முறையில்தான் இதெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. எங்கெங்கே சாத்தியம் இருக்கிறதோ, எங்கெங்கே ஏராளமான இட வசதி இருக்கிறதோ, அங்கே காலனி கட்டுகிறோம். எல்லா இடங்களிலும் காலனி கட்ட வேண்டும் என்ற அவசியம் கிடையாது. இராமநாதபுரம் ஜில்லாவைப்

7th November 1966]

பொறுத்தவரையில், எங்கெங்கே நிலம் இருக்கிறதோ, எங்கெங்கே இவர்களுக்கு உதவி பண்ண முடியுமோ, அங்கெல்லாம் அதற்காக விசேஷ டெபுடி கலெக்டர் நியமித்து, நிலத்தைக் கண்டுபிடித்தும் கொடுத்துவிடுகிற உதவியெல்லாம் செய்கிறார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : பர்மாவிலிருந்து வரவேண்டியவர்கள் எல்லாம் வந்து சேர்ந்துவிட்டார்களா ? இன்னும் மேற்கொண்டு வரவேண்டியவர்கள் இருக்கிறார்களா ?

கனம் சபாநாயகர் : காலனியைப்பற்றிக் கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கும்போது, கனம் அங்கத்தினர் வேறு விஷயத்திற்குப் போய்விட்டார்.

திரு. எரு. சீமைச்சாமி : பர்மா அகதிகளுக்கு வீடுகள் பர்மனென்ட்டாகக் கட்டுவது, தொழிற்சாலைகள் அமைப்பது ஆகியவை போதிய நிதி வசதியைப் பொருத்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுதே பர்மா அகதிகளில் பாதிப் பேர் தெருவிலே பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், நிதி வசதி இடம் கொடுக்கும்போது தான் இத்தகைய வசதிகளை அவர்களுக்குச் செய்வதென்றால், மற்ற பாதிப் பேர்களும் செத்து விடுவார்கள். இதையெல்லாம் கருதி உடனடியாகத் தொழிற்சாலைகளைத் துவங்கி, அவர்களைத் தொழில்களில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : உடனடியாகத் துவங்கச் செய்வதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொண்டதன் பேரில்தான், ஓரளவு நாம் உதவி செய்திருக்கிறோம். இந்த நாட்டில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு இல்லாத உதவியைக் கூட அவர்களுக்குச் செய்திருக்கிறோம். இதை இன்னும் விரிவாகச் செய்வது நிதி வசதியைப் பொருத்திருக்கிறது.

* 414 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal to provide the repatriates from Burma with stalls and bunks in suitable areas in Madras City;

(b) if so, the details thereof; and

(c) whether similar provision would be made in other important towns in the State?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) Proposals called for from the Collector of Madras are awaited.

(c) The Government have already sanctioned a scheme for the construction of bunks/stalls by local bodies for being allotted to the Burma repatriates who have been granted business loan.